Post of Joint Director of Sericulture.

*506 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to fill up the post of Joint Director for Sericulture which is vacant now ?

THE HON. THIRU S. MADHAVAN: The post of Joint Director of Industries and Commerce (Sericulture) is not now in existence.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that the post of Joint Director (Sericulture) has been abolished ? May I know the reasons for the same ?

THE HON. THIRU S. MADHAVAN : Government came to the conclusion that the post is not necessary and has been unnecessarily created in the past.

THIRU B. VENKATASWAMY: Sericulture is thriving well in our Madras State especially in Hosur taluk and Thalavadi firka. So will this Government re-consider the matter and try to post a Special Officer so as to intensify sericulture in our State ?

THE HON. THIRU S. MADHAVAN : The other Joint Directors are looking after " Sericulture ". No post is necessary for "Sericulture " alone.

அணைக்கட்டுகள்.

* 507 வினா.—திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மருதங்குடி ஆற்றில் பெருமகளூர் ஏரிப் பாசனத்திற்காக அணை கட்டும் திட்டம் ஏதேனும் தீட்டப்பட்டதா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன ?

(உ) அதற்கான துரித நடவடிக்கை எடுக்க உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வந்துள்ளது. அதன் தகுதிகளை யொட்டி அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்படும்.

(உ) ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை எப்போது தொடங்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே இத்திட்டம் குறித்து அங்குள்ள அதிகாரி பரிவுரை செய்து குறிப்பு அனுப்பி யுள்ளார். இதை ஆராய்ந்து பரிசீலித்த பின்னர் ஒப்பளிப்பு வழங்க படும்.